1971 டிசம்பர் 9]

THIRU K. S. KOTHANDARAMIAH : The Hon. Minister has stated that for rubber plantation areas having a height of about 1,000 feet are required. But in Hosur and Danganikotta taluks the height is about 3,000 feet. May I know from the Hon. Minister whether those areas will be selected for rubber plantation?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ரப்பர் தோட்டம் அமைப்பதற்கு வசதியாக இருக்குமானால் யோசனை செய்யலாம்.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, வால்பாறை மலைப் பகுதியில் பத்து ஆண்டுகளுக்கு முன்னால் ரப்பர் மரங்கள் நல்ல வளர்ச்சி அடைந்திருந்தது. ஆகையால் இப்பொழுது அந்தப் பகுதியில் ரப்பர் தோட்டம் அமைக்கும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் ஏற்கனவே சொன்னேன், மரங்கள் நல்ல வளர்ச்சி அடைந்தால் போதாது நல்ல பயன்தரக்கூடியதாகவும் லாபம் கிடைக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட இடம் இப்போது கன்னியாகுமரி மாவட்டம் ஒன்றுதான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரையைச் சுற்றிலும் நகரப்பேருந்துகள்

***212 வினா.—திரு பி. எஸ். மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை நகரைச் சுற்றிலும் 20 மைல் தூரத்திற்கு நகரப் பேருந்துகள் (City buses) விடுகிற செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : மதுரை நகரம் மாநகரமாக ஆக்கப்பட்டு மாநகரத்தின் எல்லை விரிவுபடுத்தப்பட்டிருப்பதனால் அன்றாடம் ஆயிரக்கணக்கானவர்கள் மதுரைக்கு வந்துவிட்டுத் திரும்பிச் செல்லவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். ஆகவே பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் மதுரையில் இருந்து 20 மைல் சுற்றளவுக்கு எல்லா இடங்களுக்கும் நகர் பஸ்களைவிட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ்—ஒரு நகரத்தின் எல்லைக்குள் 15 மைல்களுக்குள்தான் நகர பஸ்கள் விட முடியும். ஆகவே, 20 மைல் சுற்றளவுக்கு நகர பேருந்துகளைவிடுவது சட்டத்திற்கு மாறுபட்டதாகும். 15 மைல்களுக்குள் விடுவதுதான் சாத்தியம். அந்த வகையில் இப்போதே டவுன் பஸ்கள் விடப்படுகின்றன.

திரு. த. சோணையா: பதினைந்து மைல்களுக்குள் விடப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் காரணமாக இன்றைய தினம் பஸ்கள் திரிபுவனம் முகப்பைத் தொட்டுவிட்டு—பஸ்

ஸ்டாண்டு வரைகூடப் போவதில்லை—போகின்றன. விசேஷ சலுகை காட்டியாவது இந்த பஸ்கள் டவுன் பஸ் ஸ்டாண்டு வரை போய்வர ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: நகரத்தைத் தொட்டு விட்டுப் போனாலே போதும். மற்ற வசதிகள் இருக்கலாம். இதற்காகச் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டுமென்று சொல்வது தமிழகத்தின் வேறுபல எல்லைகளுக்குள் பல்வேறு சங்கடங்களை உண்டாக்கும் என்பதனால் இந்தத் திருத்தத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன்: மதுரையில் நடக்கும் டி.வி.எஸ். டவுன் பஸ் சர்வீஸ் நஷ்டத்தில்தான் நடப்பதாகச் சொல்கிறார்கள். பஸ்களை தேசியமயமாக்குகிறபோது இந்த டவுன் சர்வீசை கடைசியாக எடுத்துக்கொள்ள தீர்மானித்து—அதுவரை நடந்து கொண்டிருக்க வழி செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நாட்டுடமை ஆக்குவது என்பது வெறும் லாபத்தைக் கருதியல்ல. மக்களின் நன்மையைக் கருதித்தான் நஷ்டம் ஏற்படுகிறது என்றாலும் கூட மக்களின் நன்மையைக் கருதித்தான் நாட்டுமைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி: தேசியமயமாக்கப்பட்டவுடன் சென்னை நகரத்திற்குள் தனியார் பஸ்களை எப்படி வரமுடியாது செய்திருக்கிறோமோ அதுபோல மதுரைக்குள் தனியார் பஸ்கள் வாராதவாறு செய்ய நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அமைய இருக்கிற பாண்டியன் ரோட்வேஸ் கார்ப்பரேஷன் அதைப்பற்றி விரிவான முறையில் யோசித்து என்ன முடிவு செய்கிறார்களோ அதன் படிதான் நடவடிக்கை எடுக்கவேண்டியதாக இருக்கிறது.

பழனியில் முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்

* 213 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) இந்தாண்டு பழனி தேவஸ்தான போர்டு பழனியில் உள்ள முடி எடுக்கும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுத்து வந்ததை நிறுத்திவிடுமாறு முடிவு செய்யப்பட்டது என்பது உண்மையா?

(இ) அந்தத் தொழிலாளர்களிடம் இருந்து அரசுக்கு மனு ஏதேனும் வந்ததா?

(உ) ஆம் எனில், அதன் பேரில் என்ன முடிவு செய்யப் பட்டது?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) வினாவிற்கு இடமில்லை.